அனுப்பப்படவுள்ளது. அந்த நிதி இந்த நிதியாண்டில் வரப்பெறும் என்ற ஒரு நம்பிக்கை இருக்கின்றது. எனவே, நிதி வருகின்றபட்சத்தில், இந்த ஆண்டே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கோரிக்கைகள் அத்தனையும் நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 207, மாண்புமிகு உறுப்பினர் திரு. V. செந்தில்பாலாஜி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

207—

மாசினைத் தடுத்தல்

***20718—திரு. V. செந்தில்பாலாஜி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சி தொகுதி, காகிதபுரத்தில் உள்ள காகித ஆலையிலிருந்து வெளிவரும் சிமெண்ட் மற்றும் கரித் துகள்களைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி, காகிதபுரம் பேரூராட்சியில் உள்ள தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித ஆலை நிறுவனத்திலிருந்து வெளிவரும் சிமெண்ட் துகள்கள் மற்றும் கரித் தூள்களை நவீன முறையில் கட்டுப்படுத்த ஆலை நிருவாகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு தற்போது நல்ல முறையில் இருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. V. செந்தில்பாலாஜி அவர்கள்.*

2017 ஜூலை 14]

திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, கழகத்தினுடைய பொதுச் செயலாளர் மதிப்பிற்குரிய சின்னம்மா அவர்களையும், கழகத்தினுடைய துணை பொதுச் செயலாளர் மதிப்பிற்குரிய திரு. டி.டி.வி. தினகரன் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா அரசின் சார்பாக மிகச் சிறப்பாக எழுச்சியோடு கொண்டாடப்பட்டுவரும் இந்த வேளையில், 1986 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களால் துவங்கப்பட்ட தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித ஆலை நிறுவனத்தினுடைய பெயரை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். செய்தித்தாள் மற்றும் காகித ஆலை நிறுவனம் எனப் பெயர் சூட்ட வேண்டும் என்று இந்தப் பேரவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். மேலும், 1986 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித ஆலை நிறுவனத்தில் புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவச் சிலை இதுவரையில் அங்கே இல்லை. எனவே அந்தப் பகுதி மக்களுடைய, தொழிலாளர்களுடைய நீண்டநாள் கோரிக்கையாக இருக்கின்ற இந்தக் கோரிக்கையை நிறைவேற்றும்வண்ணம், புரட்சித் தலைவர் அவர்களுடைய நூற்றாண்டைச் சிறப்பிக்கும் வகையில், புரட்சித் தலைவர் அவர்களுடைய ஒரு சிறப்பான திருவுருவச் சிலையை அங்கே அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று, புரட்சித் தலைவர் அவர்களுக்கு நூற்றாண்டு வளைவு ஒன்றையும் அமைக்க வேண்டும் என்றும் இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலிமங்கலம், மூர்த்திபாளையம், ஒரத்தை, ஆவரங்காட்டுபுதூர், கணபதிபாளையம்புதூர், பெரியபுதூர், மூனூட்டுபாளையம், அம்மாபட்டி, சொக்கன்காடு, சொட்டையூர், கந்தசாமிபாளையம், நானப்பரப்பு, ஔவாக்கல்மேடு, புதுகுறுக்குபாளையம், நல்லியாம்பாளையம், செக்குமேடு, கொங்குநகர் ஆகிய ஊர்கள்

இந்த ஆலையைச் சுற்றி அமைந்துள்ளன. இந்தப் பகுதியில் குடியிருக்கின்ற மக்கள் இந்தக் காகித ஆலையிலிருந்து வெளிவரும் சிமென்ட் தூள், கரித் தூள் மற்றும் பகாஸ் தூள் இவற்றினால் அவர்களுடைய வீட்டின் கதவை திறந்து வைக்க முடியாமல் அவதிப்படுகின்றார்கள். அந்தத் துகள்கள் முழுமையாகப் படர்ந்து, அவற்றில் அவர்கள் கால் வைக்கின்றபோது, ரேகை எடுப்பதைப்போல் தடம் பதிகின்றன. எனவே, ஆலையினுடைய நிருவாகம் இதில் சிறப்புக் கவனம் செலுத்தி, இந்த ஊர்களில் இருக்கின்ற மக்களைப் பாதுகாக்கக்கூடிய வகையில், சிமென்ட் தூள், கரித் தூள் மற்றும் பகாஸ் தூள் பரவாத வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் கட்டமாக TNPL, தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித ஆலை நிறுவனத்திற்கு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் நூறாவது ஆண்டு நினைவு நாளையொட்டி அவருடைய பெயரைச் சூட்ட வேண்டும் என்றும், அதில் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய சிலை அமைக்கப்பட வேண்டும் என்றும், அவருக்கு நூற்றாண்டு வளைவு கட்ட வேண்டும் என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகள் அனைத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், சிமென்ட் ஆலையைப் பொறுத்தவரையில், அதனைச் சுற்றி காற்று தடுப்பான்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிமென்டைக் கொண்டு செல்லும் conveyors–ல் மாசு வடிகட்டும் பைகள் அமைக்கப்பட்டுள்ளன. நிலக்கரி மற்றும் இரும்புத் துகள்கள், மூடப்பட்ட கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ளதால் காற்றில் மாசு பரவுவது தடுக்கப்பட்டுள்ளது. சிமென்ட் துகள்கள் காற்றில் பரவுவதைத் தடுப்பதற்கு நீர்த் தெளிப்பான்கள்

2017 ஜூலை 14]

பொருத்தப்பட்டுள்ளன. புகைக் கூண்டிலிருந்து வெளியேறும் மாசின் அளவு அதிகரிக்கின்றபோது automatic *ஆக* stop *ஆகும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அந்த ஆலையைச் சுற்றி 6.25 ஹெக்டேரில் 6,533 மரங்கள் நடப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும்,* Tamil Nadu Pollution Control Board *மின்னணுமூலம் கண்காணிப்பு மையம் அமைத்து தொடர்ந்து கண்காணித்து வருகிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. V. செந்தில்பாலாஜி அவர்கள்.*

முற்பகல் 10–50

திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், தொழில் துறை அமைச்சராக இருந்தபோது, தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித ஆலை நிறுவனத்திற்கு நேரடியாக வருகை புரிந்து, ஆய்வு செய்தபோது இதன் உண்மை நிலையை ஆராய்ந்து பார்த்தார்கள். பொது மக்களும் அவர்களிடத்தில் அந்தக் கோரிக்கையை எடுத்துக் கூறினார்கள். எனவே, சிமெண்ட் தூள், கரித் தூள் மற்றும் பகாஸ் தூள் ஆகியவற்றினால் ஏற்படும் பாதிப்புகளுக்கு அரசு, சிறப்புக் கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மேலும், தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித ஆலை நிறுவனத்தில் 1,248 ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிரந்தரத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படக்கூடிய மருத்துவ வசதிகளை ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கும் வழங்கக்கூடிய வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சிமென்ட் தூள், கரித் தூள் மற்றும் பகாஸ் தூள் படிவதாகக் குறிப்பிட்டார். அதற்கு ஆலையிலிருந்து வெளியேறும் மாசு அளவைக் கண்காணிக்கும்வகையில், ஆலையின் அருகில் உள்ள கிராமங்களில் மூன்று இடங்களில் சுற்றுப்புறக் காற்றின் தரம் அளவிடும் கருவி பொருத்தப்பட்டுள்ளது. காற்றின் தரத்தைக் கண்காணிக்க ஆலையின் வாயிலில் முன்புறம் தொடர்பு கண்காணிப்பு மின் திரை வைக்கப்பட்டுள்ளது. இது தமிழ்நாடு சென்னை மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின்மூலம் காற்று கண்காணிப்பு மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டபடி, நான் TNPL மேலாண்மை இயக்குநர், துறையின் செயலாளர் ஆகியோருடன் ஒரு முறை நேரில் அந்த ஆலைக்குச் சென்று ஆய்வு மேற்கொண்டு, கரித் துகள்கள் படிவது தெரிந்தால், TNPL மூலமாக நடவடிக்கை மேற்கொண்டு, அதைக் குறைப்பதற்குண்டான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த ஆலையின் ஒப்பந்தத் தொழிலாளர்கள் பற்றிக் குறிப்பிட்டார். ஒப்பந்தத் தொழிலாளர்கள் நிலை குறித்தும் இந்த அரசு பரிசீலிக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதற்கிணங்க, அதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு, அவர்களுக்கு உரிய மருத்துவ சலுகைகள் வழங்குவதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்து அமர்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி, உங்கள் தொகுதிக்கும், TNPL–க்கும் அதிக தூரம் உள்ளது. பேசாமல் இருங்கள்.

வினா வரிசை எண் 208, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.